# தன்னை உருக்கி எம்மை வளர்த்த அன்னைக்கு



சுழிபுரம் வடக்கு, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## ஞானசேகரம் சறோஜினிதேவி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# “தேவி மலர்”

**03.07.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சுழிபுரம் வடக்கு , சுழிபுரத்தை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். திரு. ஞானசேகரம் சரோஜினிதேவி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "தேவி மலர்"

03.07.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்



சுழிபுரம் வடக்கு சுழிபுரம் எனும்

கிராமத்தில் வாழ்ந்து எம் வாழ்வுக்கு

வழிகாட்டியாய் இருந்து ஏற்றமிகு வாழ்வு

தந்த உங்கள் பாதக் கமலங்களில் எமது

சிறிய காணிக்கையாக அன்பு

மலர்காளால் அர்ச்சித்து இம் மலரை

சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மலர்வு 14 - 06 - 1963

உதிர்வு 03 - 06 - 2020

அமரர்

# ஞானசேகரம் சறோஜினிதேவி

## அவர்களின் திதிவெண்பா

சார்வரி வருட வைகாசித் திங்கள்
இருபத்தொராம் நாள் பிரதோஷ - திதியதனில்
நீண்ட புகழ் சறோஜினிதேவி
ஏகினாள் சிவன் இறையடியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**தேவாரம்**

மங்கயர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூத நாயகன்
நால்வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைத்தூட்டும் தாயினுஞ் சாலப்

பரிந்து நீ பாவியேனுடைய

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி

உலப்பிலா ஆனந்தமாய்

தேனினைச் சொரிந்து புறம் புறம்

திரிந்த செல்வமே சிவபெருமானே

யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்

எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலாவொன்றே

உணர்வுசூழ்கடந்த தோருணர்வே

தெளிவளர்பளிங்கின்றிரண் மணிக்குன்றே

சித்தத்துட்டித்திக் குந்தேனே

அளிவளருள்ளத் தானந்தக்கனியே

அம்பலமாடரங்காக

வெளிவளர்தெய்வக் கூத்துகந்தாயைத்

தொண்டனேன் விளம்புமாவிளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

வேத நெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறை விளங்கப்
பூத பரம்பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீத வளவயற் புகலீர்
திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பட்ட திருநாட்டிலே யாழ் நகரில் அமைந்துள்ள சுழிபுரம் வடக்கு சுழிபுரம் என்னும் கிராமத்தில் குமாரசாமிக்கும் மீனலோசனிக்கும் 14.06.1963 இல் முதலாவது புத்திரியாக அவதரித்தார். தனது கல்வி அறிவை யாழ் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் கற்று சிறப்படைந்தார். தனது பெற்றோரின் ஆசிர்வாதத்துடன் பனிப்புலத்தை பிறப்பிடமாகக் கொண்ட நாகராஜா மரகதத்தின் மூத்த மகனை அன்பு கணவனாக கரம் பற்றினார். தனது வாழ்க்கை பயணத்தில் இல்லறத்தின் பயனாக அன்புச் செல்வங்களாக இரண்டு புத்திரிகளையும் மூன்று புத்திரன்களையும் பெற்றெடுத்தார்.

தான் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்களை தனது கணவருடன் சேர்ந்து அன்புடனும், அரவணைப்புடனும் தங்களால் இயன்றளவு எல்லோருடைய ஆசைகளையும் நிறைவேற்றி வளர்த்து வந்தார். பிள்ளைகளுக்கு அவர்களது விருப்பத்திற்கு ஏற்றபடி படிக்கச் செய்து அவர்களுக்கு விரும்பிய வாழ்க்கைகளையும் அமைத்துக் கொடுத்தார்.

தான் வசித்து வந்த காலப்பகுதியில் அயலவர்களுடன் நன்றாகப் பழகுவதுடன் தருணம் அறிந்து உதவி என்று மற்றவர்கள் கேட்கும் போது உதவிகள் பல செய்து ஒரு புண்ணியவதியாக வாழ்ந்து வந்தார்.

தனது பிள்ளைச் செல்வங்களில் தனது முதலாவது மகள் யாமினியை கிருஸ்ணரூபனுக்கும், இரண்டாவது மகள் சுரேஸ்குமாரை மதாங்கினிக்கும், மூன்றாவது மகன் யுகதாஸை கௌசிகாவுக்கும், நான்காவது மகன் அகிலனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவறஞ்சினிக்கும், ஐந்தாவது மகள் சிந்துஷாவை விஜிதரனுக்கும் திருமணங்கள் செய்து வைத்தார். பேரப்பிள்ளைகளாக ரிஷோனா, ரிஷிகா, ரிஸ்வினி, அபிநாஸ், அஜிஷன், அஷானி, சதுர்ஜன், சஸ்வினி அஸ்வின், சஸ்விந்த், விஜிந்த் எனும் செல்லக்கனிகளைக் கண்டு மகிழ்ந்தார்.

தான் பெற்று எடுத்த பிள்ளைகளில் மூத்த மகளும், மூத்த மகன், இளைய மகன் லண்டனில் வசித்து வருகின்றதால் அடிக்கடி லண்டன் பயணம் தனது அன்புக் கணவருடன் மேற்கொண்டு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தார் இரண்டு தடவை இந்தியாவிற்கும் சென்று வந்தார். தனது இளைய மகள் கனடாவில் இருப்பதனால் அந்நாட்டிற்கும் அடிக்கடி பயணங்கள் மேற்கொண்டு உறவாடி மகிழ்ந்து வாழ்ந்தார்.

மூன்றாவது மகனுடன் தான் பிறந்த ஊரில் வாழ்ந்து கொண்ட காலத்தில் கொடிய நோயிற்கு உள்ளானார். இவரை எல்லோரும் செல்லமாக பெரியவள் என்று அழைப்பர்.

கணவன் பிள்ளைகள் , மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்களுடன் உறவாடி வாழ்ந்தவர். காலன் கணக்கு நெருங்கி வர பிரதோச விரத நாள் அன்று தனது 57 வது அகவையை அடைவதற்கு சில நாள்களுக்கு முன்பு 03.06.2020 இல் இறைபதம் அடைந்தார். எங்களது பாசமிக்க அம்மா தனது வீட்டில் தன்னுடைய கடைசி ஆசை போல் வீட்டிலே எல்லா நினைவுகளுடனும் இறைபதம் எய்தினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் புலம்பல்

மூத்த மகள் என்று அரவணைத்து
நான் நினைத்தவை எல்லாம் அடையவைத்தாய் - நான்
கேட்டதெல்லாம் வாங்கித்தந்த
கரங்கள் எங்கே அம்மா
உங்களுக்கு விதி சீக்கிரம் வந்ததோ என் தாயே..
நம்ப முடியவில்லை இன்னும் கொஞ்சகாலமேனும்
என்னுடன் இருப்பாய் உன்னை பார்ப்பேன்
என நான் கண்ட கனவெல்லாம் பொய்த்துப்போனது தாயே

நாங்கள் தவிப்பது யாருக்கும் தெரியாது
என் மனவேதனையை யாரிடம் அம்மா இனி சொல்லி
ஆறுவேன் என் தாயே தினம் தினம் நீ எனக்காக
வருவாயென என் மனம் ஏங்குது தாயே!
மறுஜென்மம் என்று ஒன்று இருந்தால்
மீண்டும் உனக்கு மகளாக நான் பிறக்க வேண்டும்
என வேண்டுகிறேன் தாயே.

மகள்
K. மாலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அன்னைக்கு நான் எழுதும் விழிநீர் வரிகள்

அம்மா நீ இல்லை என்றால் நானும் இல்லை
ஆனால் நீ இல்லா உலகில் மட்டும்
தனியாக தவிக்க விட்டு சென்றாயே! அம்மா.

கண்களை மூடி பார்த்தாலும்
கண்களை திறந்தாலும்
கனவிலும் என் அன்னையே
எப்போதும் உன் நினைவுதான் அம்மா.
தொலை தூரம் நீங்கள் இருந்தாலும்
என் சந்தோசத்தை பகிர்ந்திடவும்
கவலையில் தோள் சாய்ந்திடவும்
தவறாமல் என்னுள்ளே வருகை தருகிறது
உன் நினைவுகள் அம்மா!

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன் அம்மா.
கண்கள் இல்லாமல் ரசித்தேன் அம்மா.
காற்றே இல்லாமல் சுவாசித்தேன் அம்மா
கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன் அம்மா.
உங்கள் கருவறையில் தான் அம்மா.
நான் வாழும் மூச்சு வரை உங்கள் நினைவுடன்
வாழுவேன் அம்மா.
உங்கள் கனவுகள் எல்லாம்
நிறைவேற்றுவேன் அம்மா.

**என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும் பாசமிகு**

மூத்த மகன்
**சுரேஸ்குமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகன் யுகனின் உள்ளுணர்வு...............

ஈரைந்து மாதம் எனை சுமந்து
ஈன்ற அன்பு மகன் என்னை
ஈ எறும்பு கூட அணுக விடாமல்
காத்து வந்தாயே தாயே......

பாகுபாடு இல்லாமல்
பட்டினியை அறியாமல்
பாடுகள் பல சுமந்து
பரணி தனில் எனை ஈன்றாய்

தலை சிறந்த உறவு
தலைக்கனம் இல்லாத உறவு
தன்நலம் கருதா உறவு
தரணிதனில் அன்னை மட்டுமே.

ஐவிரலுக்கும் பொதுவான ஒரு
முற்றமாய் நீர் இருந்தீர் அன்னையே
ஒன்றை ஒன்றுபிரியாமல்
காவலாய் நின்றீர் அன்னையே.

காலத்தின் போக்கில் - வாழ்க்கைப் பயணம்
கரைகாணா வானம் போல்
நீண்டு கொண்டே செல்கிறது
நீர் இல்லாத இவ் நிமிடமும் அது போலவே.......

அன்று நீர் ஈன்றீர் பஞ்ச புதல்வர்களை
ஐவரை ஈன்றும் பயம் என்ன?
உம்இறுதிச் சடங்கிற்கு- தனி
மரமாய் நான் நின்றேன் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு தர யாருமில்லை அம்மா
அரவணைக்க யாருமில்லை அம்மா
தோள் தட்டி எழுப்ப யாருமில்லை அம்மா
என்னுடன் நீர் இருந்த போது - உம்
அருமையை நான் உணரவில்லை அம்மா
இன்று நீ என்னை விட்டு - நெருங்க
முடியா இடத்திற்கு சென்று விட்டாய்.
உன் அருமை புரிந்தும் என்ன பயன்?
செய்த தவறுகளை மன்னிக்கவோ
உன் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.
எனக்காக மனமிரங்காயோ அம்மா.

காலம் முழுதும் சிறுவர்களாய் இருந்திருக்கலாம் அம்மா
வாழ்க்கைப் பாடத்தை கற்று முடிக்கவில்லை அம்மா.
அன்னை என்ற வழிகாட்டி இல்லையே அம்மா.
என்னை அழாமல் பார்த்த காலங்கள் கடந்தன அம்மா
கண்ணீர் அருவி போல் வடிந்தோடுகிறது அம்மா
முந்தானை எடுத்து துடைக்க நீ இல்லையே அம்மா
உணவுண்டு பல நாட்களானது அம்மா.

முன்பெல்லாம் சாப்பிட வைக்க பாடுபட்டாயே அம்மா
அன்பு கதைகள் பல கூறி ஊட்டி விட்டாயே அம்மா.
பசி வேதனையில் வாடுகிறேன் அம்மா
ஒரு வாய் உன் கையால் உண்ண காத்திருக்கிறேன் அம்மா

ஒரு துளி கண்ணீரைக் கூட தாங்காயே அம்மா
அம்மா என்ற குரலுக்கு ஓடோடி வந்தாயே அம்மா
காலில் பட்ட காயத்தை கூட தாங்காயே அம்மா
மனவலி இன்று என்னை கொல்கிறது அம்மா
ஆணி வைத்து நெற்றியில் அறைவது போலுள்ளது அம்மா
அம்மா அம்மா. என பலமுறை அழைத்தேன் அம்மா.
என்குரல் உன் செவிகளில் எட்டவில்லையா அம்மா.
இல்லை கேட்டும் கேட்காதது போல் நடிக்கிறாயோ அம்மா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலேயே நமை பிரிய எவ்வாறு துணிந்தாய் அம்மா
கரடு முரடு பாதையை துணிவுடன் கடந்தாயே அம்மா
பிள்ளைகள் நலமுடன் வாழ வழிவகுத்தாயே அம்மா
நீ விதைத்த விதை வளர்ந்து பயன் தரும் வேளையில்
அம்மா என்னை தனியே தவிக்க விட்டு சென்றாயே அம்மா
உன்னை காக்க நான் எடுத்து வைத்த படியெல்லாம்
கண்முன்னே உடைந்து விழுந்தனவே அம்மா.

பிறப்பு மாதமும் இறப்பு மாதமும் ஒன்றாய் இருப்பது
மேலும் என்னை கொல்கிறது அம்மா.
உடலிருந்தும் உயிரில்லா யடம் போல் வாழ்கிறேன் அம்மா
நீ என்னுடன் இல்லை என்பதை என்னால்
இன்னும் ஏற்று கொள்ள முடியவில்லை அம்மா
இப்போது கூட என்னை நீ
சுற்றி வருவது போல் உள்ளது அம்மா.

நீ இல்லாமல் ஒரு அணு கூட அசையவில்லை அம்மா
யாது அறிவேன்? யாது செய்வேன்? அம்மா
நீ இன்றி எனக்கொரு சொந்தம் ஏதம்மா
ஆயிரம் சொந்தம் சூழ்ந்தாலும் அம்மா
உன் அன்பிற்கு ஈடாகுமோ அம்மா
நீ செய்த தியாகங்களும் விட்டுக்கொடுப்புகளும்
யார் அறிவார் அம்மா நீ இன்றி நான்
துடிப்பதை கூட யாரும் அறிவாறில்லையம்மா

சீக்கிரம் வந்துவிடு அம்மா
சுற்றிலா பார்த்த சொர்க்கம் போதும்
சுற்றி பறந்து வந்திடம்மா
சுற்றும் முற்றும் காத்திருக்கிறேன் நான்
அம்மா ஓடி வந்திடம்மா என்னிடம்.

ஞா.யுகதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் பிரிவு

அம்மா உங்களின் பிரிவை நான் எவ்வாறு எழுதுவேன்? எம் தந்தையை திருமண பந்தத்தில் கை கோர்த்து எம் ஐவரையும் கருவில் சுமந்து உங்கள் இரத்தத்தையும் சதையையும் தந்து உருவமைத்து இவ்வுலகில் எங்களை உதிர்க்க வைத்த எம் தாயே! இவ்வுலகில் நீங்கள் வாழும் காலம் இவ்வளவு தான் என்பதை எம் இதயம் எவ்வாறு ஏற்றுக்கொண்டோம் அம்மா? ஒரு பொழுதும் படைத்தவனை உச்சரிக்காத நாள் இல்லையே உன் வாழ்வில், அதனால் தானோ அழைத்தான் ஆண்டவன் தன் அருகில் அன்புடன்.

எவ்வாறு சொல்வதம்மா உங்களை பற்றி? இளகிய மனம், நேர் கொண்ட பார்வை. மனதில் தோன்றுவதை வெளிப்படுத்தலும் நேர்மை, பாகுபாடு பாராது யாராயினும் பழகும் தன்மை, அயலவர்களுடன் பகிர்ந்து உண்ணுதல் அத்தோடு முடிந்தவரை பிறருக்கு உதவுதல் உங்கள் துணிச்சலும், மன தைரியத்தையும் கண்டு பல தடவை நாம் வியந்தோம் அம்மா.

என் வாழ்வில் நான் உன் அருகே இருந்த காலம் வெறும் 13 வருடங்கள் தான் அதுவே என் மனம் நிறைந்த பொற்காலம். ஒவ்வொரு பொழுதும் நான் அந்த நினைவுகளை நினைக்காது இருந்ததில்லை. இதுவரை எந்த நினைவுகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குரல் ஒலியையும் கேட்டு இல் வாழ்க்கை தொடர்ந்தது. இனி எப்போது என் தாயின் குரல் ஓசை நான் கேட்பேன்? அம்மா உன்னோடு உரையாடும்பொழுது நேரம் போவதுதெரிவதில்லை. அடுக்கடுக்காக கதை இருக்கும் நாம் இருவரும் பகிர்வதற்கும் எம்மோடு எப்போதும் கலந்து இருப்பாய்யென்று நான் அறிவேன், எம் மனசோடு உம்மோடு உரையாடுவோம்.

தாயை எவ்வாறு நான் சொல்வேன் உன் கதையை என் மனதில் தோன்றுவதை? எம் தந்தையோடு சேர்ந்து ஒளிவீசும் தீபம் போல் எம் ஐவரையும் எவ்வளவு கஸ்சப்பட்டு வளர்த்து இவ்வுலகில் உருவாக்கினீர்கள் என்பதை நாம் அறிவோம் அம்மா. காலங்கள் போவதை என் மனம் உணர மறுக்கின்றது. நான் வெளிநாடு வருவதற்கு முதல் நாள் என் கை கோர்த்து வயல் வெளி நடை தந்து குறிப்பு பார்க்க சென்றோம். பறளாய் பிள்ளையார் கோவில் வழியாக. அதன் பின் வரும் வழியில் வயல் கிணற்றில் தண்ணீர் அள்ளிவிட்டு நான் உன் தம்பியின் நாட்டுக்கு போகப் போகிறன் என்று பழைய உங்கள் ஞாபகங்களை என்னோடு பகிர்ந்தது நேற்று போல் என் மனதில் தோன்றுகிறது.

என் நெஞ்சத்தில் உள்ள உங்கள் அழகை எவ்வாறு வர்ணிப்பேன் அம்மா? செந்தளிப்பான உருவத்தோடும், மங்களகரமான முக அலங்காரத்துடனும் இருக்கும் இடம் எல்லாம் நிறைவாகவும் ஒளியாகவும் இருந்து ஒரு தடவை சிறந்த குடும்ப பெண்மணியாக உங்கள் வாழ்வை அர்ப்பணித்த தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்வில் எம் தந்தையோடு ஒன்றாய் பயணித்த காலங்கள் பெரிது. ஒரு வருடம் உங்கள் பெயரை அழைக்காமல் இருக்க மாட்டோம். இனி எங்களோடு அவரும் உங்கள் நினைவுகளுக்கு தொடர் கதை.

அம்மா உங்கள் வாழ்க்கை மூலம் வாழ்க்கையின் புரிதலை அறிய வைத்தீர்கள். ஆண்டவருக்கும் உங்களை பிடித்ததால் தானோ கொஞ்சம் வெகுவாக அழைத்து விட்டான் எங்களை விட்டு, அதனால் தான் தந்தானோ கொடிய நோயை கொடியவன். இருந்தாலும் வைராக்கியமாய் ஐந்து வருடம் இருந்தீர்கள். எமக்காக எம்மை பக்குவப்படுத்தும் கடவுளுக்கு நன்றி சொல்லுவேன். என் தாய் மண்ணை என் தந்தையுடன் நான்கு முறை நாம் இருக்கும் நாட்டுக்கு வந்து அருள் புரிந்து எம்மோடும் பேரப்பிள்ளைகளோடும் சிறிது காலம் வாழ்ந்து மகிழ வைத்தமைக்கும் இக்காட்சிகளே என் அக்கா , அண்ணா, தங்கை, எம்மவளின் நினைவோடு நாம் பயணிப்போம்.

தாயே குறை ஒன்றும் இல்லாது இவ்வுலகில் உங்கள் கடமையை நன்றாகச் செய்துவிட்டு கடைசி வரையும் யாருக்கும் கடமைப்படாமல் சென்று விட்டீர்கள். கடைசி உயிர் இருக்கும் வரை எங்களின் தேவைகள் நோக்கியே இருந்தது. உங்கள் சிந்தனை இதனால் தான் உன் தாய்மையே தெய்வத்திலும் மேலானது என்று உணர்கின்றேன் இன்று. இனி வரும் காலங்கள் நாங்கள் எம்தந்தையோடு எம் ஐவரிலும் காண்வோம் உங்கள் உருவம், எண்ணங்கள், சிந்தனைகள், விருப்பங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்களையும் எங்கள் பயணங்கள் உங்கள் விருப்பம் போலவும் உங்கள் ஆசியுடன் எம் தந்தையோடு சேர்ந்து ஒரு கைக்கு ஐந்து விரல்கள் போல் ஒற்றுமையாகவும் , ஒருவருக்கொருவர் உதவியாக இருப்போம்.

எங்களை கருவில் சுமந்த தாயே எங்களைவிட்டு ஒளி வீசும் தீபமே , எங்கள் செல்வந்தியே, புண்ணியவதியே நாம் அறிவோம். நீங்கள் இறைவனடி சேர செல்லும் பயணம் மிக பசுமையாகவும் இலகுவாகவும் அமையும் என்றதனால் தானோ பிரதோஷம் நேரம் பார்த்து அழைத்தானோ தன்அருகில். அத்துடன்உங்கள் முந்தைய சொந்தங்கள் காத்திருக்கும் உங்கள் வருகைக்காக.

இவ்வுலகில் படைத்தவன் எனக்கென்று எழுதிய கடமைளை முடித்து விட்டு , உன் மடி தேடி விழுவேன். இறைவனடி மடி சாய்ந்து உன்னோடு தூங்குவதற்கு அதுவரைக்கும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்திக்கின்றேன். கவலையின்றி நீங்கள் இறைவனடி சேருங்கள் தலை சாய்ந்து தொழுவேன் உன்னை.

ஓம்சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இப்படிக்கு உங்கள் இளைய மகன்
அகிலன் வரிகள் தந்தையினதும் சகோதரர்கள்
**ஞான சேகரம் அகிலன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பாசமிக்க அம்மாவிற்கு எனது வரிகள்

உன்னோடு நான் phone எடுத்து கதைக்கின்ற நேரம் ஒவ்வொருநாளும் வரும் போதும் என்பதை உன் குரல் கேட்க துடிக்குது அம்மா.

நீங்க கடைசியாக கனடாவுக்கு என்ர வீட்ட வந்து விட்டு திரும்பி ஊருக்கு போகும் போது நீ அடுத்த வருடம் வருவாய் என்று தான் நான் நினைத்தேன் அம்மா.

அம்மா நீங்க வைத்தியசாலைக்கு போகின்றீர்கள் என்று அப்பா சொல்லும் போது அங்க போனால் உனக்கு வருத்தம் சுகமாகி வீட்டுக்கு திரும்ப வருவாய் என்று தான் நான் நம்பி இருந்தேன். இப்படி நடக்கும் என்று ஒரு துளியும் கூட நான் நினைக்க வில்லை அம்மா.

கடைசியாக என்னோடு கதைக்கும் போதும் நான் எனிமேல் கனடா வரமாட்டேன், எனக்கு ஒரு கவலையும் இல்லை, நான் சாகப்போகிறேன். நீ உன்ர பிள்ளைகளை வடிவாக வளர்த்திடு என்று சொல்லும் போது அம்மா சும்மா தானே சொல்லுறா என்று நினைச்சிட்டேன் அம்மா.

செல்வச் செழிப்புடன் உன்னுடைய பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள், அப்பா உடன் வாழவேண்டிய காலத்தில் இந்தக்கொடிய நோய் உன்னைத் தேடி வந்ததோ அம்மா.

உன் மனதுக்கு தெரிந்து விட்டது அந்த இயமன் உனக்கான பாசக் கயிற்றை வீசுற காலம் வந்து விட்டது என்று அம்மா.

நான் தனியாக வீட்டில் இருப்பேன், நான் பயந்து விடுவேன் என்று தானே அம்மா என் கனவில் கூட நீ வராமல் இருக்கிறாய் அம்மா.

ஒவ்வொரு நாளும் நித்திரைக்கு செல்லும் போது நீங்க என்னுடைய கனவில் வரவேணும் என்று நினைத்துக் கொண்டே நித்திரைகொள்வேன் அம்மா உங்களுக்கு இப்படி நடந்து விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கனவு மாதிரி இருக்கக் கூடாதோ என்று என் மனம் ஏங்கிறது அம்மா.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உன்னோடு வாழ்ந்த நினைவுகளை நினைத்து கொண்டும், அதைப் பற்றிக் கதைத்துக் கொண்டும் என்னுடைய பொழுது போய்க் கொண்டு இருக்குது அம்மா.

உன் பிள்ளைகளின் ஆசைகள் எல்லாத்தையும் நிறைவேற்றி இன்று எங்கள் எல்லோரையும் தனியாக விட்டு விட்டு நீ தெய்வத்தோடு இரண்டறக் கலந்து விட்டாய் அம்மா.

உன்னுடைய இழப்பை உன் பிள்ளைகள், அப்பா, உன்னுடைய சொந்தங்களால் எப்படி தாங்கி கொள்ள முடியும் அம்மா.

எல்லாமே கடகட என்று நடந்து முடிந்து விட்டது ஒரு கனவு போல அம்மா.

உன்னுடைய மனத் தைரியத்தை கண்டு நானே நினைச்சு இருக்கிறேன் அம்மா எவ்வளவு தைரியமான அம்மா என்று ஆனா இண்டைக்கு நீ எங்களுடைய மனதை கல்லாக்கி விட்டு உனக்காக அழுகின்ற நேரத்தையும் குறைத்து விட்டாய் அம்மா.

யாருக்கும் பயப்படாமல் எதையும் மனதில் வைத்திருக்காமல் வெளிப்படையாக பேசுகின்ற தன்மையும், துணிச்சலும் தான் உனக்கான அழகு அம்மா.

உன்னுடன் வாழ்ந்த நினைவுகளை என் இதயத்தில் சுமந்து கொண்டு உன் நினைவுகளோடு வாழும் உன்னுடைய இளைய மகள் எழுகிறேன் அம்மா.

மகள்

வி. சிந்துஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா...........

## தம்பி உறவு கவிதை

தாலாட்டு நீ பாடி
உன் மடியில் தூங்க வைத்தாய்
என் உயிரை நீ வளர்த்தாய்.........
தாய் தந்தை போல நீயும்

அன்பினை வாரி கொடுத்தாய்....!
அரும்பு மீசை வளரும் முன்னே
வண்ணம் பூசி எனை ரசிப்பாய்
அசட்டையாக நான் இருப்பேன்
அடித்து என்னை அரவணைப்பாய்
ஆசைப்பட்ட பொருட்கள் எல்லாம்
அடுத்த நொடியே எனக்களிப்பாய்
அர்த்தமுள்ள வாழ்க்கையை நீ
திட்டம் திட்டி எனக்களித்தாய் இத்தனையும் எனக்காக
ஒரு ஜென்மத்திற்குள் செய்து கொடுத்தாய்
தூசி என்னை தொட்டாலும் கட்டி போட்டு அதை அடிப்பாய்
கொஞ்சிக் கெஞ்சி எனை கிள்ளுவாய் அம்மாறு
சொல்லித் தந்த என் முதல் அம்மா நீதானே மொழி
தெரிய என் செவிக்கம் உன் உதட்டசைவால் உணர
வைத்தாயே என் அக்காவாக நீ இருந்தாலும் என் தகப்பன்
போல தெரிகின்றாய் எத்தனை தவறுகள் நான் செய்தாலும்
தாங்கி என்னை பிடிக்கின்றாய்.

சுற்றிசுற்றி நான் வருவேன்
தேடி எனக்கு சோறு போட்டாய்
வெட்டி பையனாக நான் இருந்தும்
என்னை விட்டுக் கொடுத்துப் பேசமாட்டாய்
உதிரம் கொடுத்த தாய் போல ஒத்தடம் கொடுத்து
தோள் அணைப்பாய் தடுக்கி விழுந்து நான் பார்த்தாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உன் காலடிகளில் நான் விழிப்பேன்.
தாயிற்கு அடுத்தபடியாக உன் மடியை எனக்கு அளித்தாய்
நோய் என்று படுத்து விட்டால் பட்டினி கிடந்தும்
பார்த்துக்கிட்டாய் ஒரு நண்பனாகவும் நீ இருந்தாய்
நல்லது கெட்டதையும் சொல்லித் ஒரு தாயாகவும்
நீ இருந்தாய் என்னுடைய அன்றாட நிலவரங்களையும்

நீ அறிந்தாய் உன் விரல்கள் பிடிக்கும்
போதெல்லாம் புது தெம்பினை நான் உணர்ந்தேன்
என் ஆயுசுக்கு உன் விரல் பிடிக்க
எனக்குத்தான் யோகம் இல்லை

பாதி உயிரைக் கொடுத்தவள் தாய் தான் என்றாலும்
மீதி உயிரை வளர்த்தவள் நீ தானே அக்கா
பூமிக்குள் பிறந்த நாள் ஒரு தாய்தான் கிடைப்பாள்
என்று நினைத்திருந்தேன் இங்கு வந்து
பார்த்த போது தான் தெரிந்தது எனக்கு இரண்டு
தாய் இருக்கிறார்கள் என்று

அடுத்த பிறவி ஒன்று எனக்கு இருந்தால்
உன் வயிற்றுக்குள்
நான் பிள்ளையாக பிறக்க வேண்டும் அக்கா
உன் அன்பினை மறுபடியும் நான் பெற வேண்டும்.

நன்றி



**தம்பி**
**கு.சோதீஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய மாமியின் பிரிவு

மீளாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டுச் சென்றீரே
உம் பிரிவுத்துயரில் விடுத்து மீண்டு வர
நாட்கள் போதவில்லை மாமி

கலகலத்திடும் உங்கள் பேச்சில்
மெய்சிலிர்த்துப் போனவர்கள் நாங்கள்
இன்று கண்ணுக்கு எட்டிய தூரம் எல்லாம் தேடுகிறோம்
ஆனால் கண்காணாத் தூரத்திற்கு காலவன்
கொண்டு போன சூழ்ச்சி என்னவோ!

அன்புள்ளம் கொண்ட மாமியே உங்களின் இறப்பு என்னை அதிகப்படுத்திவிட்டது. நான் கனவிலும் நினைக்கவில்லை மாமி இவ்வளவு சீக்கிரம் உங்களை கடவுள் அழைப்பாரென்று வைத்தியசாலையில் நீங்கள் இருக்கும் போது உங்களோட கடைசியா கதைக்கும் போது நயினாதீவு போகப்போறேன் என்று சொன்னீங்களே மாமி அதுக்கு நான் வருத்தத்தை மாத்திக் கொண்டு போகலாமே என்று சொன்னேனே மாமி இறைவனடி சேரத் தானோ நயினாதீவு போகப்போறேன் என்று சொன்னீங்களோ மாமி.

நான் கல்யாணம் செய்ய முன்னம் ஒவ்வொரு நாளும் பின்னேரம் விட்டுக்கு வரும்போது சாப்பாடு தந்துதானே என்னை விட்டவிடுவீங்க சாப்பாடு இல்லாட்டியும் எனக்காக செய்து தருவீங்களே அப்படியான குணம் கொண்ட என்ர பெரிய மாமிக்கு கடவுள் ஏன் தான் கான்சர் எனும் கொடிய நோயைக் கொடுத்தாரோ? உரிமையோடு சொல்வீங்களே சிவரஞ்சி அதைச் செய்யம்மா என்று நானும் செய்வேனே மாமி. கல்யாணம் செய்து உங்கடை (கடைக் குட்டி) கடைசி மகனை என்ர பொறுப்பில் விட்டிட்டு போகேக்க சொன்னீங்களே பிள்ளைக்கு பிட்டு அவிச்சு குடு என்று அப்போது நான் தாயின் பாசத்தை உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கட கடைக்குட்டியை கட்டித் தந்தீங்க மாமி இப்படி ஒரு பிள்ளை உலகத்தில தேடினாலும் கிடையாது மாமி. இந்த பிள்ளையைப் பெற்ற புண்ணியவதியே நீ நீடுழி காலம் வாழ கொடுத்து வைக்கேல்லையே மாமி எவ்வளவு பொறுமை இரக்கம், எல்லோருக்கும் உதவும் மனப்பாங்கு மனத்தைரியம் உள்ள உங்களை இறைவன் இவ்வளவு சீக்கிரம் தன்னிடம் அழைத்து விட்டாரே மாமி லண்டன் வந்து எங்களோடு பழகின நினைவுகள் என்ர கையால் உங்களுக்கு சமைத்து தந்த சாப்பாடு எல்லாம் நல்லாவிருக்கென்று சொன்னியேம்மா என்ர கடவுள் பக்தியைப் பார்த்து நீயும் என்னைப் போலவே இருக்கிறாய் என்று சந்தோசப்பட்டீங்களே மாமி இதில் மட்டுமல்ல வெளிப்படையாக கதைப்பதிலும் என்னைப் போலவே இருக்கிறாய் என்று சொன்னீங்களே மாமி.

நீங்கள் எங்களை விட்டு போகவில்லை மாமி உங்களின் மூத்த மகளைப் பார்த்தால் தெரியுது உங்களை அப்படியே வைச்சுரிச்சு கடவுள் படைத்திருக்கிறான். உங்கள் மாதிரியே உங்கட மற்ற பிள்ளையளேம், பேரப்பிள்ளைகளையும் வளர்த்து வருவா. மாமி உங்களின் அழகை எவ்வாறு வர்ணிப்பது அம்மாளாச்சிய பார்த்த மாதிரி பெரிய பொட்டு வைத்து மங்களகரமான குடும்ப பெண்ணாக இருப்பீங்களே உங்கட சொந்த மருமகளா என்னை தேர்ந்தெடுத்த மாமிக்கு வாழ்க்கை முழுக்க கடமைப்படுவேன் மாமி. எல்லாத்தையும் வெளிப்படையாகவே கேட்பீங்களே மாமி உங்களை இவ்வளவு சீக்கிரம் காலனவன் கொண்டு போக சூழ்ச்சி என்னவோ?

கடைசி நேரத்தில் உங்களை பார்க்ககூட முடியாமல் போய்விட்டது. உங்களின் கடைசி கடமையையும் செய்ய எங்களுக்கு இறைவன் அருள் புரியவில்லையே மாமி. உங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எல்லாப் பிள்ளைகளினது பேரன், பேர்த்திகள் என்று 2, 3 பிள்ளைகளை பார்த்தீர்கள் ஆனால் எங்களின் ஒரு பிள்ளையை தானே பார்த்தீர்கள் மாமி. எனக்கு நீங்களே அடுத்த பிள்ளையாக வந்து பிறக்க வேணும் என்று கடவுளை வேண்டுகிறேன் மாமி. உங்களின் பிள்ளையின் ஆசையும் இது தான் மாமி.

இவ்வளவு நல்ல எண்ணங்களை கொண்ட என் அன்பான பெரிய மாமியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

**உங்களின் கடைசி மருமகள்**

**சிவரஞ்சினி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார் கதை

காப்பு

அகரும்பு இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறிடு
வரும்அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என் கதைக்கு நீஎன்றும் காப்பு.

விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலம்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்கு
சங்கத் தமிழ்மூன்றுந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீருமாமம்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப் பாலும் மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.
சண்டைப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி,
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடை உ டை யானே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உ ன்னைத்தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த முமமதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பின்
அன்னதிற் பிறவில் அரிஸ்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்

மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்து வளர்சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மாதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளுள் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவன் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வுஆகித்
தர்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையுஞ் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருத்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கி சூழ
அணிமலர்க் குழலஉமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையோடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூட என்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினில் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் தூமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்தூர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்து ஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கஎன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள்என
மைம்மலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கெனச்
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்பமர் கொங்கை பொருத்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன் எதிர்சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பழச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவு கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங்கு அவன்அடி வீழ்ந்து இறைஞ்சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள்ளவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நவமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பி ரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடித்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூதவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்ஞைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண் திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வருங்கருங் குழலாள் மற்றும்உண்டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரம்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலற்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடம்மருப்பு இரண்டுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிகூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நளனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தூங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐக்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலும் கால னாலும்
ஒருவனை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளிலே
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்தி
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அண்ணலை நோக்கி
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனோடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோரந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகையோடு எழுந்துஅங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங்காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவன் ஏவல்செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்று எண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்த்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிற்போற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டாளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கினத்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்தொளி விளங்குங்
கோடி சூரியற்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
குடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒரு மருப்பு உடையோன்
ஒரு கையில் தந்தமும் ஒரு கையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன்று உளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்து எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெற்றியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கி
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசி(இ)லா மண்ணால் அமைதலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னம்நா மங்களால்
ஆரம்ப த்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை அவன் தான் அர்ச்சனை பண்ணிப்
பகர்தரும் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகீரதன் என்னும் பார்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்தொடி தன்னைச்
செருக்கோடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற்குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சகமனதாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனம் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வனைத் தருவேர் போமின் நீரென
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாகவன்தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ யுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாளும் பொறுக்கஒண் ணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர் என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல் கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையார் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்ச்சினை ஆலின் கீழ்க்கிடந்த தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத்தின் கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில்தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானத்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீராடு
குருந்த மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தழைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தலைக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம்மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகம்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏன் என
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன் தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பெருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கதைசொல் ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனும்
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கடசெவி யாகெனத்
தண்ணருங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குறுநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயகன் விரதம்நோற்று அதன்பின்
சுடர்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழைணைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
அழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கரணை கூர்ந்து
பண்டையில் இரட்டிப் பதம்அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் வழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்ற ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனக்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து அகற்றிய பின்னர்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளதனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவம் பாவிநீ தான்யாார் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனம் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கையினொடு குத்தினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்துமூ ஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் ஆம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கு அழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅசவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமும் ஒருபணி காரமும்
கண்ணேர் இலக்கணை கையிற் கொடுக்கப்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்து கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடை னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்தான் ஈன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்து அணுகும் - உன்னி
ஒருகொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்டநோற்கில் - மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்லினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்
நிஷ்டையுங்கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்செ குறி

**நூல்**

நிலை மண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும்செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக்காக்க என்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசகன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறு இடும் வேலவன் நித்தம் வருக!
சிறிகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச! ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடியாறும்
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகனென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவில் சரஸ்வதி நற்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ச தரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகேட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு உடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விசங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனிவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திண்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என்வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்வாய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தா சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்ற ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்தர் சஷ்டி கவசம்
முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.



## சிவபுராணம்

### கலிவெண்பா

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கொடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெலக்
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்காப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற்கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாலிக்கும் ஆலியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒலிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாமைவயுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாய் மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதகக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தததமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்ன
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கொண்டு தொண்டர்
தீட்டங் கலைத்தமிழ்த்
தீம்பா லமுதந் தெளிக்கும்
வண்ணம் காட்டும்
வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பணமுமவ தானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

*சரஸ்வதி துதி*

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தேவாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக் குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசுரனை கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அளிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தான்
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர
நெறியறியாது திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்தவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்ல வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்குக் வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நம்பி அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண் திறந்து காட்டுமடி
சொல்லக் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்

முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு

எச்சக்தி லோர்க்களெல்லாம் ஏற்றிஎமைப் போற்றிடுவர்

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்

கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்

முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர

ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே

காளியாய் வந்தமரந்த கௌரியே காப்பருளும்.

*திருச்சிற்றம்பலம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

*திருச்சிற்றம்பலம்*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதெ வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்
தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆடேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியர் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
 வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
 கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
 கண்ணுக் கினியானைப் பாடிக் கிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
 எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.
மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
 போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
 ஞாலமே விண்ணே பிறவே அரிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கொதாட்டுஞ்
 சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
 ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ னென்னலை நாளைவந் துங்களை
 நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
 வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
 வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
 ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இலையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந்
துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழீய தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னனைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னை பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவா அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்
பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யாம் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தேங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்.
ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செய்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கச் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ
றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைபோம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

முற்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைமின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடு பல்லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுகி ரண்ண கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோகான் அயன் தன் பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யான் கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்

காம்பணி மின்கள் கறையுரலை

நேச முடைய அடியவர்கள்

நின்று நிலாவுக என்று வாழ்த்தி

தேசமெல் லாம் புகழ்ந் தாடும் கச்சித்

திருவேகம் பன் செம் பொற் கோயில் பாடிப்

பாச வினைப் பறித்து நின்று

பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே

அறு கெடுப் பாரய னுமரியும்

அன்றி மற்றிந்திர னோடமரர்

நறு முறு தேவர் கணங்க ளெல்லாம்

நம்பிற் பின் பல் தெடுக்க வொட்டம்

செறிவுடை மும்மதில் எய்த வில்லி

திருவேகம் பனி செம்பொற் கோயில் பாடி

முறுவற் செவ் வாயினீர் முக் ணப்பற்க்

காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே

உலக்கை பல வோச்சு வர் பெரியர்

உலகமெ லாமுரல் பேதாதென்றே

கலக் அடியவர் வந்து நின்றார்

காண உலகங்கள் போதா தென்றெ

நலக்க அடி யோமை ஆண்டு கொண்டு

நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த

மலைக்கு மருகனைப் பாடிப்பாடி

மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாமவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்குக்
காடகமாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத் தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட் கொண்ட நாண் மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட் கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடற் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம் பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடற் பொற்சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும் நாமே

மாடுநகை வாள் நிலவு வெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம் பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடற் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

மையர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட் கொண்டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்த நல்லீரல்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடக்கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

சங்கம் அரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ் குழல் சூழ்தரு மலை யாடச்
செய்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர் சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைச பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நத்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்து தித் திக்க வல்ல
கேனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்திப்
பானங் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாளும் வந் தன்பர் தம்மோ
டாட் செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொற் செய்சுண்ணம் இடித்தும் நாமே

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாதிப் பிள்ளைபாடி
மல்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர்க் கொண்றை மாலைபாடி

மத்தமும்பாடி மதியும்பாடிச்

சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்

சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்

கட்டிய மாசுணக் கச்சைபாடிக்

கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்

இட்டிநின் றாடும் அரவம்பாடி

ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு

மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்

சோதியுமாய் இரு ளாயினார்க்குத்

துன்பமு மாய் இன்பம் ஆயினார்க்குச்

பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்

பந்தமு மாய் வீடும் ஆயினாருக்கு

ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு

ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
14
06
1963



உதிர்வு
03
06
2020

எமது அன்பு நண்பன் யுகதாஸ் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

## சரோஜினிதேவி ஞானசேகரன்

அன்பு என்றால் உன் முகம் தான்
எங்கள் உள்ளத்தில் தோன்றுதம்மா
தொல்லைகள் தீர்க்கத் துடியாய்
துடித்தெழுந்தாயே
நீ வேரோடு சாய்ந்ததனால்
வாடுகின்றோம் நாமிங்கு
இறைவன் திருவடியை
நீ பற்றிவிட்டாலும் ஆழ்மனதில் உன்
அன்புமுகம் மறைந்திடவில்லை அம்மா !

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிரம் தாழ்த்தி கரம் கூப்பி
# சொல்கின்றோம்
# நன்றிகள்

அணைந்தும் அணையாத சோதியாய் விளங்கும் எமது குலவிளக்கு எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு உடனே வந்தவர்களுக்கும் உதவி செய்தவர்களுக்கும், மலராஞ்சலி அனுதாபம் தெரிவித்த உறவுகளுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும், துண்டுபிரசுரம், மலர்வலையம் வைத்தும் தொலைபேசி மூலம் துக்கம் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் எமக்கு ஆறுதல் கூறி அரவணைத்து எம்மை ஆறுதல்படுத்தியவர்களுக்கும், மற்றும் அனைவருக்கும் இம் மலரை மிகமிக குறுகிய நாட்களில் அழகுற அச்சிட்ட யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ் பதிப்பகத்தினர்க்கும், எமது குடும்பம் சார்பாக சிரம் தாழ்த்தி எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரம்பரை விருட்சம்

*** குமாரசாமி + மீனலோசனி**

- * சறோஜினிதேவி
- * யோகினி
- இரத்தினேஸ்வரி
- அருந்தவ செல்வன்
- அற்புதராணி
- சாருதாதேவி
- சோதீஸ்வரன்

*** நாகராஜா + மரகதம்**

- ரஞ்சினி
- ஞானசேகரம்
- உலகநாதன்
- * சிலோன்மணி
- குகேந்திரன்
- உதயசூரியன்
- செல்வராசா
- சிலோன்மணி

*(அமரரைக் குறிக்கும்)

**சறோஜினிதேவி + ஞானசேகரம்**


| பாமினி + கிருஸ்ணரூபன் | சுரேஸ்குமார் + மதாங்கினி | யுகதாஸ் + கௌசிகா | அகிலன் + சிவரஞ்சினி | சிந்துஜா + விஜிதரன் |
|---|---|---|---|---|
| றிஷானா<br>றிஷிகா<br>றிஸ்வினி | அபிநாஸ்<br>அஜீசன்<br>அஷானி | சதுர்ஜன்<br>சஸ்வினி | அஸ்வின் | சஸ்விந்த்<br>விஜிந்த் |
| (லண்டன்) | (லண்டன்) | (இலங்கை) | (லண்டன்) | (கனடா) |

0776790321



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org